## அக்டோபர் – 18 – புதன்

### புனித லூக்கா நற்செய்தியார்

**ஆண்டவரே! நீர் உருவாக்கிய யாவும் நன்றி செலுத்தும்: உம்முடைய அன்பர்கள் உம்மைப் போற்றுவார்கள். திபா. 145:10**

### முதல் வாசகம் : இரண்டாவது திமோத்தி 4 : 9 - 17

அன்பிற்குரியவரே! விரைவில் என்னிடம் வர முழு முயற்சி செய்.தேமா இன்றைய உலகப்போக்கை விரும்பி என்னைவிட்டு அகன்று, தெசலோனிக்கா சென்றுவிட்டார். கிரேஸ்கு கலாத்தியாவுக்கும் தீத்து தல்மாத்தியாவுக்கும் சென்று விட்டனர்.என்னுடன் லூக்கா மட்டுமே இருக்கிறார். மாற்கை உன்னுடன் கூட்டி வா. அவர் திருத்தொண்டில் எனக்கு மிகவும் பயனுள்ளவர்.திக்கிக்குவை நான் எபேசுக்கு அனுப்பிவிட்டேன்.நீ வரும்போது நான் துரோவாவில் கார்ப்புவிடம் விட்டு வந்த போர்வையையும் நூல்களையும், குறிப்பாகத் தோற்சுருளையும் எடுத்துவா.கன்னானாகிய அலக்சாந்தர் எனக்குப் பல தீமைகளைச் செய்தான். அவன் செயலுக்குத் தக்கவாறு ஆண்டவர் அவனுக்குப் பதிலளிப்பார்.அவனிடமிருந்து உன்னைக் காத்துக்கொள். அவன் நம்முடைய போதனையை அதிகம் எதிர்த்தவன்.நான் முதன்முறை வழக்காடிய போது எவரும் என் பக்கமிருக்கவில்லை எல்லாரும் என்னை விட்டு அகன்றனர். அக் குற்றம் அவர்களைச் சாராதிருப்பதாக.நான் அறிவித்த செய்தி நிறைவுற்று, அனைத்து நாட்டவரும் அதனைக் கேட்க வேண்டுமென்று ஆண்டவர் என் பக்கம் நின்று எனக்கு வலுவூட்டினார் சிங்கத்தின் வாயிலிருந்தும் என்னை விடுவித்தார்.

**பதில்பாடல் :** உம் அன்பர்கள் உமது அரசின் மாட்சியை அறிவிப்பார்கள்

### நற்செய்தி : லூக்கா 10 : 1 - 9

அக்காலத்தில் ஆண்டவர் வேறு எழுபத்திரண்டு பேரை நியமித்து, அவர்களைத் தாம் போகவிருந்த எல்லா ஊர்களுக்கும் இடங்களுக்கும் தமக்கு முன்னே இருவர் இருவராக அனுப்பினார். அப்போது அவர் அவர்களை நோக்கிக் கூறியது: ”அறுவடை மிகுதி வேலையாள்களோ குறைவு. ஆகையால் தமது அறுவடைக்குத் தேவையான வேலையாள்களை அனுப்பும்படி அறுவடையின் உரிமையாளரிடம் மன்றாடுங்கள்.புறப்பட்டுப் போங்கள் ஓநாய்களிடையே ஆட்டுக் குட்டிகளை அனுப்புவதுபோல் உங்களை நான் அனுப்புகிறேன்.பணப்பையோ வேறு பையோ மிதியடிகளோ எதுவும் நீங்கள் எடுத்துச் செல்ல வேண்டாம் வழியில் எவருக்கும் வணக்கம் செலுத்த வேண்டாம்.நீங்கள் எந்த வீட்டுக்குள் சென்றாலும், ”இந்த வீட்டுக்கு அமைதி உண்டாகுக!” என முதலில் கூறுங்கள்.அமைதியை விரும்புபவர் அங்கு இருந்தால், நீங்கள் வாழ்த்திக் கூறிய அமைதி அவரிடம் தங்கும் இல்லாவிட்டால் அது உங்களிடமே திரும்பிவிடும்.அவர்களிடம் உள்ளதை நீங்கள் உண்டு குடித்து அந்த வீட்டிலேயே தங்கியிருங்கள். ஏனெனில் வேலையாளர் தம் கூலிக்கு உரிமை உடையவரே் வீடுவீடாய்ச் செல்ல வேண்டாம்.நீங்கள் செல்லும் ஊரில் உங்களை ஏற்றுக்கொண்டால் உங்களுக்குப் பரிமாறுவதை உண்ணுங்கள்.அங்கு உடல் நலம் குன்றியோரைக் குணமாக்கி, இறையாட்சி அவர்களை நெருங்கி வந்துவிட்டது எனச் சொல்லுங்கள்“ என்றார்.

**தியானம்:** தாமாக இரைதேடி உண்ணத்தொடங்கும்வரை மட்டுமே பறவையினங்களோ அல்லது மிருகங்களோ தம் குஞ்சுகளுக்கு உணவு தேடிக்கொடுக்கின்றன. அவை இரைதேடத் தொடங்கியதும் தனிவழியே சென்றுவிடுகின்றன. ஆனால் மனிதனோ தம் பிள்ளைளுக்காக இறுதிவரை போராடுகின்றான். புனித பவலடியாரும் வாழ்க்கையில் வீழ்ந்து எழுந்தார். வீழ்ந்து எழாத மனிதன் பக்குவப்பட முடியாது. நிலைவாழ்வடைய “இது வழி” அல்லது “அது வழி” என்பதல்ல மாறாக “நானே வழி” என்று இயேசு கூறிய வழியில் நடந்தவர் துன்ப துயரங்களூடாக பயணித்தாலும், இயேசுவைப் போதிப்பதில் மனந்தளராமல் இருந்ததை இன்றைய முதல் வாசகத்தில் நாம் பாாக்கின்றோம். ஓநாய்களிடையே ஆட்டுக்குட்டியை அனுப்புவது போன்று 72 சீடர்களை ஆண்டவரின் நற்செய்தியை அறிவிக்க இயேசுவினால் அனுப்பப்பட்டார்கள். மேடு பள்ளங்கள் கரடு முரடான பாதைகள் மிகுந்த ஏமாற்றங்கள் கீழே அமிழ்த்தும் தோல்விகள் இவைகளூடாக பயணம் செய்தார்கள். மனிதனானவன் இவ்வுலகில் வியாதி, பிசாசு. இறப்பு, இயற்கை ஆகிய நான்கு சக்திகளுக்கும் வெகுவாக்கப்படுகின்றன. ஆனால் தற்போது உலகில் பலபாகங்களிலும் நடைபெறும் இயற்கை சீற்றங்கள், யுத்த முழக்கங்கள், நாகரீக தன்மைகள் இவைகளால் அலைக்களிக்கப் படுகின்றான். நாளை என்ன நடக்கப்போகின்றதோ என்ற கேள்விக்குறி எல்லோா் மனதிலும் உருவாகிக் கொண்டே வருகின்றது. ஆனால் இவை எல்லாவற்றின்மீதும் கடவுளுக்கு முழு அதிகாரமும் வல்லமையும் இருந்தன என்பதை நற்செய்தியில் பல சந்தா்ப்பங்களில் பாா்க்கின்றோம். “நானே வழி” என்று கூறிய இயேசுவின் வழியில் நடப்பவனுக்கு எல்லா துன்ப துயரங்களுடாகவும் வெற்றி கிடைக்கும். “ நாளை நான் இறைவனோடு இருப்பதென்பதல்ல இன்று நான் இறைவனோடு இருக்கின்றேனா? என்பதை நாம் சிந்திப்போம்.”